LouisSaveinDupuisJournalofMultidisciplinaryResearch2024,3: 1- 4
Doi.: 10.21839/lsdjmr.2024.v3.131

**ResearchArticle**

# இருண்டகாலத்தில்தமிழிலும், தமிழ்இலக்கியத்திலும்ஏற்பட்டமாற்றங்கள்

திருமதி. வி. விக்னேஸ்வரி,

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

இம்மாகுலேட்மகளிர்கல்லூரி, சின்னகங்கணாங்குப்பம், கடலூர் – 607 006.

**ஆய்வுச்சுருக்கம்:**

கெடலருமாமுனிவர்கிளர்த்துடன்தொருதேக்கக்கடல்கெழுகனைசுடரிற்கலந்தொளிரும்வாலுளைகுஅழலவிர்சூழல்செங்கண்அரிமாவாய்மலைந்தானைத்தாரோடுமுடிபிதிரத்தமனியப்பொடிபொங்கஆர்புனல்இழிகுருதிஅகலிடம்உடனனைப்பக்கூருகிறான்மார்பிடந்தகொலைமலிதடக்கையோய்!

**களப்பிரர்பற்றியவாழ்த்துப்பாடல்**

களப்பிரர் வரலாற்றை முழுமையாக அறியகல் வெட்டுச்சாசனங்களோ, செப்பேட்டுச்சாசனங்களோ, பழங்காலநாணங்களோ, வேறுபழம் பொருள்கள் கிடைக்கவில்லை என்றாலும் துண்டு துண்டாகச் சிதறிக்கிடந்த வரலாற்றுதுணுக்குகளை யெல்லாம் ஒழுங்கு படுத்திதந்தமயிலையார் வழங்கியகளப்பிரர் வரலாற்றைக் கொண்டு இருண்டகாலத்திலும் புதியதோர் விடியல் ஏற்பட்டது என்பதையும் தமிழிலும், தமிழ் இலக்கியத்திலும் மாற்றங்கள் புகுத்தப்பட்டன என்பதையும் இவ்வாய்வுக்கட்டுரை முன்நிறுத்துகின்றது. மேலும் இவ்வாயவானது விளக்கமுறை ஆய்வினைக்கொண்டு அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** களப்பிரர் – பிராமி – சமணர் – மொழி – கலை – சங்கம்.

## முன்னுரை

இயற்கை நெறிக்காலமான சங்ககாலத்தில் தமிழ் அரியணையில் இருந்து ஆட்சி செலுத்தியது. சங்க மருவியகாலத்தில் தமிழகத்தில் களப்பிரர் என்னும் வேற்று நாட்டாரின் அரசாட்சி இருந்தது. பாலி, பிராகிருதம், சமசுகிருதம் போன்ற பிற மொழிகளின் செல்வாக்கும் ஏற்பட்டது. களப்பிரர்கள் கன்னட மொழியைத் தாய் மொழியாகக் கொண்டார்கள். எனவே, அவர்கள் தமிழ் மொழிக்கு முழுமையான ஆதரவைத் தரவில்லை. இருப்பினும் அக்காலத்துத் தமிழர்களும், சமண,பௌத்த, சைவ, வைணவசமயத்துத் தமிழ் அறிஞர்களும், தமிழைவளர்க்க முனைந்தார்கள். களப்பிரர் காலத்தை இருண்டகாலம் எனக் கூறுவர். இருப்பினும் அவ்விருண்டகாலத்தில் தமிழிலும் இலக்கியத்திலும் ஏற்பட்ட மாற்றங்களை அறிவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**தமிழ்ச்சமுதாயத்தில்பன்மொழிவளமை:**

களப்பிரர் ஆட்சி கி.பி.250ஆம் ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்டது எனலாம். களப்பிரர் ஆட்சியின் காலம் குறித்துமயிலை, சீனி. வேங்கடசாமி குறிப்பிடும் போது அவர்கள் ஏறத்தாழகி.பி.250 இல் அல்லது அதற்குச் சற்றுப்பின்னர் தமிழகத்தைக்கைப் பற்றிச்சேர, சோழ, பாண்டியநாட்டை அரசாண்டனர். (மயிலைசீனி. வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம்) எனக்கூறுகிறார். இக்களப்பிரருடைய ஆட்சிக்காலத்தில் கன்னடமொழி பிராகிருதம், சமசுகிருதமொழி தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றன. களப்பிரர்களின் காலத்தில் சமண,பௌத்தமதங்கள் செல்வாக்குப் பெற்றன. களப்பிரர்களின் காலத்தில் சமண,பௌத்தமதங்கள் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன. பிராகிருத மொழியே ஆட்சிமொழியாக விளங்கியது. தமிழ்மொழி தானாகதழைத்து ஓங்கியது. நாளடைவில் அறக்கருத்துக்கள் மக்களிடம் சென்றடையும் வண்ணம் தமிழில் கொணர்ந்தனர். அதன் விளைவாக தமிழிலும் அற இலக்கியங்கள் பல்கிப்பெருகின.

**வச்சிரநந்தியின்திரமிளசங்கம்:**

கி.பி.5ஆம் நூற்றாண்டில் மதுரை நகரில் ஒருசங்கம் இருந்ததாக அறிய முடிகிறது. வச்சிரநந்தி என்பவர் கி.பி.470-ஆம் ஆண்டில் திரமிள சங்கத்தை அமைத்தார். வச்சிரநந்தி அமைத்த சங்கம் சைனசமயத்தை வளர்ப்பதற்கான சங்கமாகும். இருப்பினும் தமிழ் மொழியை வளப்படுத்த அது பெரிதும் உதவியது எனலாம்.சமண சமயத்தில் பழங்காலத்தில் சமணத்துறவிகளின் கூட்டம் அதிகமாக இருந்தது. இத்துறவிகள் தங்கள் சங்கத்தை நான்காகப் பிரித்தனர்.

- நந்திகணம்
- சேனகணம்
- சம்மகணம்
- தேவகணம்

என்றுபெயர். இந்த நான்கு கணத்தில் நந்திகணம் பெருகைக்குரியது. வச்சிரநந்தி, இச்சங்கத்தை இரண்டாகப்பகுத்தார். அதற்கு திராவிடகணம் எனப்பெயரிட்டார். அச்சங்கத்தை மதுரையில் நிறுவினர். திராவிடம் எனச்சங்கத்திற்குப் பெயர் சூட்டியதும் தமிழின் தலைநகரமான மதுரையில் அச்சங்கத்தை நிறுவியதும் தமிழுக்கு அழகு சேர்த்தது. எஸ்.வையாபுரிபிள்ளை இச்சங்கத்தைப் பற்றிக் கூறும் போது

“வச்சிரநந்தியின் பேர் போனசங்கம் கி.பி.470 இல் நிறுவப்பட்டது. தொல்காப்பியம் அந்தச் சங்கத்திலிருந்து வெளிவந்த முதல் இலக்கியமாக இருக்கக் கூடும். இதன் ஆசிரியர் ஒரை என்னும் சொல்லை (பொருள்:135) ஆள்கிறார்” (மயிலைசீனி. வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம்)

**தமிழில்ஏற்பட்டமாற்றம்:**

சங்ககாலத்தில் இருந்த பிராமி எழுத்துக்கள் சங்ககாலத்தின் இறுதியில் மாற்றம் அடைந்தன. இந்த மாற்றம் எழுது கருவிகளின் மூலமாக ஏற்பட்டமாற்றம் பனையோலையும், எழுத்தாணியுமே இருந்ததால் இம்மாற்றம் ஏற்பட்டது.

களப்பிரர் ஆட்சிக்காலத்தில் பிராமி எழுத்துக்களில் மாற்றம் ஏற்பட்டது. புது வகையான எழுத்துக்கள் தோன்றின. இது வட்ட எழுத்து என வழங்கப்பட்டது. தமிழ் நாடெங்கும் இவ்வட்டெழுத்துக்கள் வழக்கத்திற்கு வந்தன. களப்பிரர் ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு முழுவதும் பரவலாகக் காணப்பட்டன. சமணர்களும், பௌத்தர்களும் உருவாக்கிய கிரந்த எழுத்துக்களும் பரவின. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பிராகிருத, சமசுகிருத மொழிச்சொற்களும் தமிழில் கலந்து விட்டன.

**அகம் - புறம்பொருளில்மாற்றம்:**

களப்பிரர் காலத்தில் மற்றொரு மாற்றமும் நிகழ்ந்தது. அது மக்களின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய அகப்புறச் சிந்தனைகளில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. இயற்கை நெறிக் காலத்தில் மக்கள் தங்கள் வாழ்க்கையை அகம், புறம் எனப்பிரித்து வாழ்ந்தார்கள். அவற்றின் வெளிப்பாடே திணை இலக்கியங்கள் எனப்படுகின்றன. களப்பிரர் காலத்தில் காதல் வாழ்வும், போர்த்திறனும் பற்றிய கருத்துக்களில் புதிய சிந்தனைகள் உருவெடுத்தன. புறப்பகைவரை வெல்ல அவரோடு பல்லாயிரம் பேரைக் கொன்று குவித்து வெற்றி பெறுவ தேசிறந் வெற்றியாகக் கருதினர். ஆனால் இதற்கு மாறாக புதிய சிந்தனையைப் பௌத்தர்களும், சமணர்களும் உண்டாக்கினர். முனிதன் தன் ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றை அடக்கிகாமம், வெகுளி, மயக்கம் என்னும் அகப்பகையை வெல்ல வேண்டும் அதுவே பகைவரை வெல்லும் வெற்றியைக் காட்டிலும் சால சிறந்தது எனப்பு திய கருத்தைத் தோற்று வித்தனர். (மயிலைசீனு. வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம்)

**மொழிபெயர்ப்புஇயக்கம்:**

களப்பிரர் காலத்தில் பிற மொழி நூல்கள் சமஸ் கிருதத்திலும் தமிழிலும் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது சான்றாக சிம்மசூரி முனிவரின் உலோகவியாபகம் என்னும் பாதக மொழி நூலை சர்வநந்தி என்பவர் சமஸ்கிருத மொழிக்கு பெயர்த்தார். அது போல் பெருங்கதையின் மூலநூல் மொழி பெயர்க்கப்பட்டு பிரகத்கதா என அறியப்பட்டது. இதனைவே தி.செல்லம், கி.பி.நான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் பிறமொழி நூற்களைச் சமஸ்கிருதத்துக்கு மொழிபெயர்ப்புக்கும், ஒருமொழி பெயர்ப்பு இயக்கம் இருந்தது. (வே.தி.செல்லம், தமிழக வரலாறும் பண்பாடும்). இது போல் கோயிலின் உட்பகுதிகளாக திருச்சுற்று, திருமுற்றம், கருவுண்ணாழி ஆகியவை பிரகாரம், சாந்தி, கற்பக்கிரகம் எனத்தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. அதேபோல் மனித உடல் தொடர்புடைய இடகலை, பிங்கலை, அழி முனை ஆகியவை இடா, பிங்களா, சூட்சுமனா எனப்பெயர் பெற்றன. களப்பிரர் காலத்தில் நிலவிய மொழிபெயர்ப்பு மாற்றங்களினால் சமசுகிருதத்தின் கடினஓசைகளும் தமிழுக்குதாவின. சமசுகிருத ஓசைகளைத் தமிழில் வெளிப்படுத்தகிரந்த எழுத்துக்கள் தமிழ்வரி வடிவில் சேர்க்கப்பட்டன. காமம், வெகுளி,

மயக்கம் என்னும் அகப்பகையை வெல்ல வேண்டும். அதுவே பகை வரை வெல்லும் வெற்றியைக் காட்டிலும் சாலச்சிறந்தது எனப் புதிய கருத்தைத் தோற்று வித்தனர். (மயிலைசீனு. வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம்)

**கலைகளில்ஏற்பட்டமாற்றம்:**

சங்க காலத்தின் தமிழச்சமுதாயத்தில் சிறந்துவிளங்கிய ஆயகலைகளின் அறுபத்தினான்கும், அக்காலத்திற்குப் பின்னும் சிறந்து விளங்கின. தமிழகத்தில் ஏற்பட்டகளப்பிரர் ஆட்சியில் தமிழ்க்கலைகள் எவ்வாறு இருந்தன என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள இயலவில்லை. இருப்பினும் களப்பிரர்களின் தாயகமும் திராவிடப்பகுதியாக இருப்பதால் மாற்றங்கள் அதிகம் ஏற்படவாய்ப்பில்லை. நுண்கலைகள் ஐந்தும் வளர்ச்சி பெற்றன. அவை

- கட்டடக்கலை
- சிற்பக்கலை
- ஓவியக்கலை
- இசைக்கலை
- காவியக்கலை

சமணம், பௌத்தம் செல்வாக்கு பெற்றிருந்த களப்பிரர் காலத்தில் கலைகளில் ஒன்றான கட்டடக்கலையும் வளர்ச்சி பெற்றிருந்தது. களப்பிரர்களம் திராவிட இனத்தைச் சார்ந்தவர்களாய் இருந்ததால் கட்டடக் கலையில் திராவிடக் கலைகளின் செல்வாக்குக் காணப்பட்டது.

திடீரென்று எக்கலையும் தோன்ற முடியாது. எனவே, தேவார காலத்திற்கு முந்தைய களப்பிரர் காலத்திலும் இக்கலைகள் இருந்திருக்க வேண்டும். அதே போல் பல்லவர்களின் மாமல்லபுரச் சிற்பங்கள் களப்பிரரின் கட்டடக்கலையை ஒத்து இருக்கின்றன.

**கூத்து:**

களப்பிரர் காலத்தில் கூத்துக் கலையும் வளர்ந்திருத்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. சிலம்பும், மேகலையும் இசமற்றும் கூத்துக்கள் பற்றி பேசுகின்றன. களப்பிரர் காலத்தில் கூத்துக் கலையைப்பற்றி ஒருநூல் எழுதப்பட்டதாக சான்றுகள் குறிப்பிடுகின்றன. அந்நூலின் பெயர் விளக்கத்தார்க் கூத்து. இந்நூலை எழுதியவர்கள் விளக்கத்தார். இந்நூல் அச்சுதன் என்னும் களப்பிர அரசன்காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம்.

**சமூகநிலையில்மாற்றங்கள்:**

களப்பிரர் காலம் தமிழகத்தில் நிலவிய சமூக நிலையில் சிலமாற்றங்களைக் கொணர்ந்தது பெரும் வணிகர்கள் நலிவடைந்தனர். இறையிலிநிலங்கள் வரையரைப் படுத்ததுல், நிலமானிய கிராமங்களின் விரிவி என மாற்றங்கள் ஏற்பட்டன. ஒரு பக்கத்தில் நலி உடைமையில் ஏற்பட்ட மாற்றமும், வேளாண்மைக்கு அளித்த முக்கியத்துவமும், மறுபக்கத்தில் கரைபுரண்டெழுந்த சமயப்பெருக்கும், அறக் கோட்பாட்டை வற்புறுத்தும் தத்துவக் கோட்பாடுகளும் மனிதனைமையமாகக் கொண்ட உலகியல்மைய ஈர்ப்பைத் தெய்வத்தை அடிப்படையாகக் கொண்ட சமயமைய ஈரடிக்குக் கொண்டு சென்றது.

அடித்தளமக்கள் கல்வி பயின்றனர். குறிப்பாகப் பெண்களும் கல்வி கற்க வேண்டிய தேவை உணர்த்தப்பட்டது. இது சமுதாய மாற்றத்திற்கான விடிகாலமாக அமைந்தது.

**சமூகமாற்றத்தில்கல்வி:**

தமிழகத்தில் சங்ககாலம் முதற்கொண்டே கல்விக்கு முதன்மையான தொரு இடமுண்டு. இது தமிழரின் பண்பாட்டு வளர்ச்சியைக் காட்டும். களப்பிரர் காலத்தில் பௌத்தர்களும், சமணர்களும் புதவகையான கல்வி முறையைக் கொணர்ந்தனர். சமணப் பள்ளிகளும், பௌத்த விகாரங்களும் சிறந்த கல்வி நிலையங்களாக விளங்கின. கல்வியில் தொடக்கக்கல்வியும், உயர்கல்வியும் அளிக்கப்பட்டன. காஞ்சிபுரத்தில் பௌத்தக்கல்வி நிலையம் இருந்ததாக வரலாறு குறிப்பிடுகிறது. காஞ்சிபுரம், உறையூர், நாகை, போதி மங்கை எனத்தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கல்வி நிலையங்கள் இருந்துள்ளன. வே. தி. செல்வம் களப்பிரர் காலக் கல்வி நிலையைப் பற்றிக் குறிப்பிடும் போது “காஞ்சியில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே பௌத்த கல்வி நிலையமிருந்து” (வே.தி.செல்வம் தமிழக வரலாறும் பண்பாடும்) எனக் குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை:**

இருண்ட காலம் என அழைக்கப்படும் களப்பிரர் காலத்தில் தமிழும் தமிழ் இலக்கியங்களும் நவீன மாற்றங்களைப் பெற்றன. களப்பிரர் பிற மொழியாளராக இருந்தாலும் தமிழை முற்றிலும் மறுக்கவில்லை. பிற மொழிகளின் வரவால் தமிழ் தன் வளமையை இழக்கவில்லை. அவைகளால் வளமும் பெற்றது. சமண பௌத்தம் சார்ந்த கொள்கைகள் தமிழில் வெளிவந்தன. தமிழில் அறக் கருத்துக்கள் பல்கிப் பெருகின. புதிய பாவடிவங்கள் தோன்றின. தாழிசை, துறை, வருத்தம் என புதிய பாவடிவ வகைகள் தோன்றின. மொழி பெயர்ப்பு வளர்ந்தது அகப்புறப் பொருள்களில் புதிய சிந்தனைகள் மலர்ந்தன, கலைகள் வளர்ந்தன. மதுரையில் திரமிள சங்கம் ஏற்படுத்தப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு அறியாமை என்னும் இருள் அகற்றப்பட்டது.

**துணைநூல்கள்:**

மயிலை. சீனி. வேங்கடசாமி
களப்பிரர் ஆட்சியில் தமிழகம், எம். வெற்றியரசி வெளியீடு, சென்னை. (ஆண்டு2001)

வே. தி. செல்வம்
தமிழக வரலாறும் பண்பாடும் மணிவாசகர் பதிப்பகம் (2014)